**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 60/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெள்ளத்துரை | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 15th , 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை மற்றும் ஆடு, மாடு வளர்க்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், மாடு மேய்த்து முடித்து விட்டு, வீட்டிற்கு மாடுகளை பத்தி கொண்டு வந்து கொண்டிருந்தேன். சுடுகாடு பக்கம் ரோட்டில் வந்து கொண்டிருந்தபோது, எதிரி குடித்து விட்டு, "கூதி மவனே நில்லு, உன் மாடு என்னை தள்ளி விட்டது." என்று சொன்னார். எதிரியிடம் "தம்பி, அவ்வாறு சொல்லாதே, நான் வயசுல பெரியவன். யாரு மாடு இடித்து நீ விழுந்த என்று எனக்கு தெரியாது." என்று சொன்னேன். எதிரி மீண்டும் கெட்ட வார்த்தைகளால் பேசினார். இச்சம்பவம் நடக்கும் போது, மாலை சுமார் 05.00 மணியிருக்கும். நான் வீட்டிற்கு வந்து விட்டேன். அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் எதிரி என் வீட்டிற்கு வந்தார். அதே மாதிரி கெட்ட வார்த்தைகளால் "ஆத்தா மவனே, புண்ட மவனே" என்று எதிரி திட்டினார். அவரிடம் நான்

"மாலையிலேயே பேசி விட்டோம். மீண்டும் ஏன் வீட்டிற்கு வருகிறாய்" என்று சொன்னேன். எனது அருகில் இருந்த எனது மகன் மகேந்திரனை பார்த்து, "இவனை வெட்டினால் தான் நீ அடங்கி விடுவ" என்று கூறி, அரிவாளால் எனது மகனின் இடது பக்க கழுத்தில் வெட்டி காயப்படுத்தினார். எனது மகனை வெட்டியதை நானும், எனது மனைவியும் நேரில் பார்த்து வேதனை அடைந்தோம். காயம்பட்ட எனது மகனை ஊத்துமலையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு நான் எனது பைக்கில் ஏற்றி சென்றேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது மகன் சிகிச்சையில் இருந்தபோது, போலீசார் வந்தார்கள். நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாளைப் பயன்படுத்தி தான் எதிரி எனது மகனை வெட்டினார். அந்த அரிவாள் சா.பொ.1. என்னிடம் காண்பிக்கப்படும் லுங்கி மற்றும் துண்டு சம்பவ நேரத்தில் எனது மகன் அணிந்திருந்தது. அந்த லுங்கி மற்றும் துண்டு – சா.பொ.2 வரிசை. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.16 13:07:45 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 60/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 15th , 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரிக் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 04.03.2023 ம் தேதி, இரவு சுமார் 09.00-10.00 மணியளவில் நான் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது, எதிரி வீட்டின் வெளியே நின்று கொண்டு "அண்ணே" என்று என்னை அழைத்து வெளியே வருமாறு கூப்பிட்டான். நானும், எனது அப்பா மற்றும் அம்மாவும் வெளியே சென்றோம். "உங்க மாடால் தான் நான் கீழே விழுந்து காயப்பட்டேன்." என்று சொன்னான். நான் எதிரியிடம், " எங்க மாடு இடித்து நீங்கள் கீழே விழவில்லை." என்று சொன்னேன். உடனே, எதிரி "புண்ட மவனே, தேவடியா மவனே" என்று கெட்ட வார்த்தைகளால் பேசினார். நான் எதிரியிடம் " கெட்ட வார்த்தை பேசாதே, போலீஸ் ஸ்டேஷனில் வைத்து பேசிக்குவோம்" என்று சொன்னேன். "நான் பட்ட வலி உனக்கு தெரியணும். உன்ன கொன்னாத்தான் சரியா வரும்". என்று சொன்னான்.

நான் காவல்நிலையம் செல்வதற்கு சட்டையை போடுவதற்காக வீட்டிற்குள் திரும்பி சென்றபோது, "இத்தோடு செத்து தொலை" என்று சொல்லி, அரிவாளால் எனது இடதுபக்க கழுத்தில் வெட்டினான். (சாட்சி தனது காயத்தழும்பை நீதிமன்றத்தில் காட்டி சாட்சியம் அளித்தார்.) நாங்கள் சத்தம் போட்டோம். எனது தகப்பனார் துண்டை வைத்து எனது காயத்தை சுற்றி கட்டி என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். எதிரி செல்லும் போது "என்னைக்காக இருந்தாலும் உன்னை வெட்டி கொன்று விடுவேன்" என்று கூறிச் சென்றார். முதலில் என்னை ஊத்துமலையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு எனது அப்பா பைக்கில் அழைத்து சென்றார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 அரிவாள் தான் எதிரி என்னை வெட்டிய அரிவாள். சா.பொ.2 வரிசை லுங்கி மற்றும் துண்டு நான் சம்பவ நேரத்தில் அணிந்திருந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN Digitally signed by C KATHIRAVAN Date: 2025.04.16 13:07:52 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 60/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராசாத்தி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 15th , 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். அ.சா.2 எனது மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்க்காரர். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு, இரவு சுமார் 10.00 மணியளவில் நானும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ம் வீட்டில் இருந்தோம். அப்போது தான் எனது மகன் கடையை அடைத்து விட்டு வந்து, வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தான். எதிரி வீட்டு வாசலில் நின்றுகொண்டு "ஏலே வா" என்று சத்தம் போட்டு கொண்டிருந்தார். நாங்கள் மூவரும் வெளியே வந்து எதிரியிடம் "என்ன" என்று கேட்டோம். எதிரி "உங்க மாடு தான் என்னை தள்ளி விட்டது" என்று சொன்னார். எதிரி குடித்து விட்டு வந்ததினால், அ.சா.1 "சாயந்தரமே பேசி விட்டோமே, மீண்டும் ஏன் வந்திருக்கிறாய்" என்று சொன்னார். எதிரி "இத்தோடு செத்து தொலை" என்று சொல்லி, எனது மகனின் கழுத்தை நோக்கி வெட்டி காயப்படுத்தினார். காயம்பட்ட எனது மகனை

ஊத்துமலையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு எனது கணவர் அவரது பைக்கில் ஏற்றி சென்றார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.16 13:08:05 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 60/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தராஜ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 15th , 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான். 2023ம் வருடம், வீ.கே.புதூர் காவல்நிலையத்திலிருந்து அழைத்தார்கள். நானும், எனது நண்பர் உதயக்குமாரும் அங்கு சென்றோம். மாலை சுமார் 04.00 மணிக்கு காவல்நிலையம் சென்றோம். அங்கு ஆஜர் எதிரியை எங்கள் முன்பு ஆய்வாளர் விசாரித்தார். அப்போது, எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை போலீசார் பதிவு செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவத்தில் எதிரி பயன்படுத்திய அரிவாளை மறைத்து வைத்திருப்பதை எடுத்து தருவதாக கூறியதன் பேரில், கருவந்தா பஸ்ஸ்டாப்பிற்கு பின்புறம் மறைத்து வைத்திருந்த அரிவாளை எதிரி அடையாளம் காட்டி எடுத்துக்கொடுத்ததை போலீசார் அத்தாட்சி மூலம்

கைப்பற்றினார்கள். அவைகளில் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2. அத்தாட்சி அ.சா.ஆ.3. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.16 13:08:12 +0530